*1974 மார்ச் 27]*

வழங்கியுள்ளது. இந்த அரசின் கருத்துக்கள், இம்மாநில சட்டத்துறையின் 4-7-1973-ஆம் நாளிட்ட 22451/71-13-ஆம் எண் கடிதத்தில் இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

* 625 Q.—Thiru J. JAMES : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government of India have expressed their views on the Rajamannar Committee Report?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இராஜமன்னார் குழு அறிக்கையைப்பற்றி இந்திய அரசின் கருத்துக்கள் இவ்வரசுக்கு வரவில்லை.

* 626 வினா—**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மத்திய மாநில உறவு குறித்து ஏனைய முதலமைச்சர்களின் கருத்து கேட்கப்பட்டுள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மைய-மாநில உறவுகள் குறித்துத் தங்களது கருத்துக்களை அளிக்குமாறு இம்மாநில அரசு ஏனைய மாநில முதலமைச்சர்களுக்கு குறிப்பாக வேண்டுகோள் ஏதும் விடுக்கவில்லை. ஆனாலும் மைய-மாநில உறவு ஆய்வுக்குழு அறிக்கையின் பிரதிநிதிகளுடன் அனுப்பப்பட்ட கடிதத்தில் அவ்வறிக்கையில் சொல்லப்பட்ட கருத்துகள் பற்றிச் சிந்தித்துப் பார்க்குமாறு சிறிது அவகாசம் எடுத்துக்கொள்ளுமாறு முதலமைச்சர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

**திரு. என். கே. பழனிசாமி:** இந்தச் சபையில் அடிக்கடி அறிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள்படி, மத்திய சர்க்கார் நம்முடைய திட்டங்களுக்குத் தடையாக இருப்பதாகச் சொல்வதுபற்றி, நாம் மத்திய சர்க்காரோடு நேரிடையாகப் பேசி விவாதித்தே தீர்த்துக் கொள்ளலாம். அப்படி இருக்கிறபோது அரசியல் அமைப்புச் சட்டத்தின் 256-ஆவது பிரிவை ரத்து செய்வதன் மூலம் பார்லிமெண்டுக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தை ரத்து செய்து, மாநிலத்தில் சுயாட்சி என்றும், மத்தியில் கூட்டாட்சி என்றும் மத்திய சர்க்காரைப் பலவீனமுடையதாகச் செய்வதனால் என்ன பிரயோசனம் என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மத்திய மாநில உறவுகள் எப்படி இருக்கவேண்டும் என்பதைப் பரிசீலனை செய்வதற்கு ராஜமன்னார் குழு போட்டதே குற்றம் என்றால் மத்திய அரசு